**எற்றோபிக்கோவில் பச்சைக் கொள்கலம்**

*பச்சைக் கொள்கலம்…அறிமுகம்*
எற்றோபிக்கோவில் செப்டெம்பர் 17ம் திகதி தொடங்கும் கிழமையில் ஒரு புதிய கழிவு மாற்றுத் திட்டம் – பச்சைக் கொள்கல சேதனக் கழிவுத் திட்டம் – புகுத்தப்படும். நீங்கள் அதில் பங்கு பற்றுவீர்கள். திட்டத்தின் முதல் கட்டம் எற்றோபிக்கோவில் தொடங்கும். 2005 வாக்கில் அது மாநகரம் முழுவதும் பரவும்.

றொறன்ரோ மாநகரத்து வீடு வளவுகளிலிருந்து நிரவல்புலத்துக்கு அனுப்பப்படும் கழிவுகளின் தொகையைக் குறைப்பதற்கு பச்சைக் கொள்கல சேதனக் கழிவுத் திட்டம் எங்களுக்கு உதவும். நாங்கள் இரண்டு காரணங்களுக்காக இத்திட்டத்தில் இறங்கியுள்ளோம்: கழிவுகளை நிரவல்புலத்துக்கு அனுப்புவதற்கு அதிகம் செலவாகும். சேதனக் கழிவுகளை மீண்டும் பாவிப்பது சுற்றாடலுக்கு நல்லது.

மாநகரத்துக்குச் சொந்தமான கீல் பள்ளத்தாக்கு நிரவல்புலம் 2002ல் மூடப்படும். அப்பொழுது குப்பை அகற்றும் செலவு தொன் $12 என்ற நிலையிலிருந்து தொன் $52 வரை உயரும். அது 400% தொகையை விஞ்சிய அதிகரிப்பு! எங்கள் குப்பையைத் தனியார் நிரவல்புலத்துக்கே அனுப்ப நேரும். ஆகவே கழிவைக் குறைத்து அனுப்புவதே முக்கியம்.

பச்சைக் கொள்கலத் திட்டம் ஓர் இலகுவான திட்டம். அதனை எளிதில் மேற்கொள்ளலாம். நீங்கள் கழிக்கும் உணவு, கடதாசி போன்ற வீட்டுச் சேதனக் கழிவுகளை வெளியே இட்டு வைக்கலாம். நிரவல்புலத்துக்குச் செல்லும் குப்பையுள் ஏறத்தாழ 30% சேதனக் கழிவுகளே. பச்சைக் கொள்கலத் திட்டத்தின்படி சேதனக் கழிவுகள் ஒரு புதிய களத்துக்குச் செல்லும். அங்கே அவை கலப்புரமாக மாற்றப்படும். அது தோட்டங்களிலும் தோப்புகளிலும் பயன்படும்.

**பச்சைக் கொள்கல சேதனக் கழிவுத் திட்டத்தால் விளையும் மாற்றங்கள**
உங்கள் குப்பை, மீள்பாவனைப் பொருட்களை அகற்றுவதில் சில மாற்றங்கள் ஏற்படும்.

1. உங்கள் குப்பை, மீள்பாவனைப் பொருட்கள் அகற்றப்படும் திகதி மாறும். அவை செப்டெம்பர் 17ம் திகதி தொடங்கும் கிழமை முதல் ஒரு நாள் பிந்தி அகற்றப்படும். எடுத்துக்காட்டாக, தற்பொழுது உங்கள் குப்பை திங்கள் கிழமை அகற்றப்படுவதே வழமை என்றால், இனிமேல் அது செவ்வாய்க் கிழமையே அகற்றப்படும். செவ்வாய் புதனுக்கும், புதன் வியாழனுக்கும், வியாழன் வெள்ளிக்கும் நகரும். திங்கள் கிழமை அரச விடுதலை என்றாலும் குப்பை அகற்றப்படும். மாநகரத்தின் எஞ்சிய பகுதிகளிலும் செவ்வாய் முதல் வெள்ளி வரையே குப்பையும் மீள்பாவனைப் பொருட்களும் அகற்றப்படுகின்றன.
2. குப்பை இரண்டு கிழமைகளுக்கு ஒரு தடவை அகற்றப்படும்.
3. கிழமைக்கு ஒரு தடவை உங்கள் பச்சைக் கொள்கல சேதனக் கழிவு அகற்றப்படும்.
4. வளவுக் கழிவு தொடர்ந்தும் ஏப்பிறில், மே, அக்டோபர், நவம்பர் மாதங்களில் கிழமைக்கு ஒரு தடவையும், யூன், யூலை, ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் இரண்டு கிழமைகளுக்கு ஒரு தடவையும் அகற்றப்படும்.
5. மீள்பாவனைப் பொருட்கள் தொடர்ந்தும் இரண்டு கிழமைகளுக்கு ஒரு தடவை அகற்றப்படும்.

ஒரு முக்கியமான விடயத்தை நீங்கள் உள்ளத்தில் பதிப்பது முக்கியம். இன்று “குப்பை” என்றவுடன் உங்கள் உள்ளத்தில் எழும் எண்ணம் குப்பையே. பச்சைக் கொள்கல சேதனக் கழிவுத் திட்டம் தொடங்கியதும் அந்த எண்ணம் எழாது. (உணவுக் கழிவு, அழுக்கு துடைப்புத் தாள், இறைச்சி, மீன், பூனை மலம், பிராணிகளின் கழிவு, கழிவுக் கச்சு) முதலிய சேதனக் கழிவுகள் அனைத்தும் வாராந்தம் உங்கள் பச்சைக் கொள்கலத்திலிருந்து அகற்றப்படும்.

மீளப் பாவிக்க முடியாத, இரண்டு கிழமைகளுக்குச் சேர்த்து வைக்கத்தக்க பிளாஸ்திக்கு, உலர்த்தி – தகடுகள் (dryer sheets) கொடி, முடி முதலிய காய்ந்த, மணக்காத, பொருட்களே உங்கள் குப்பையில் எஞ்சியிருக்கும்.

**பச்சைக் கொள்கலத் திட்டம் எதற்காக?**
ரொறன்ரோ மாநகரம் கழிவுகளை அகற்றுவதற்கு வருடாந்தம் இலட்சக் கணக்கான டாலர்களைச் செலவழித்து வருகிறது. அந்தச் செலவு மேலும் அதிகரித்து வருகிறது. மீள்பாவனைப் பொருட்களை நீல, சாம்பல் நிறப் பெட்டிகளில் இட்டுவைக்கும் முறையினால் அந்தப் பிரச்சனை தணிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் வீட்டுக் குப்பையுள் பெருந்தொகையான சேதனக் கழிவுகள் அதனுள் அடங்கவில்லை.

**பச்சைக் கொள்கலத் திட்டம் எவ்வாறு செயற்படுகிறது?**
ரொறன்ரோ மாநகரம் உங்களுக்குப் பெரியதும் சிறியதுமாக இரண்டு கொள்கலங்களை வழங்கும். பெரியதைத் தெருவோரத்தில் வைத்து எடுக்கலாம். சிறயதைச் சமையலறைக்குள் தண்ணீர் ஏந்தியின்கீழ் அல்லது உங்களுக்கு வசதியான ஓரிடத்தில் வைக்கலாம். நீங்கள் விரும்பினால் உங்கள் வழமையான குப்பைக் கொள்கலனைப் போலவே இவ்விரு கொள்கலங்களுக்கும் பிளாஸ்திக்குப் பைகளைப் பாவிக்கலாம். ஆகஸ்ட் பிற்பகுதியில் இக்கொள்கலங்களை உங்கள் வீட்டுக்கு எதிரே வைத்துச் செல்ல இருக்கிறோம்.

**பச்சைக் கொள்கலத்தினுள் பின்வருவனவற்றை இடலாம்…**

- பழவகை, மரக்கறிக் கழிவுகள்
- இறைச்சி, மீன் வகைகள் (எலும்பு, தோல், கொழுப்பு)
- பஸ்டா (Pasta), பாண், தானிய உணவு வகைகள்
- முட்டைக் கோது, பாலுணவு வகைகள்
- காப்பிக் கட்டை, வடி, தேயிலைச் சரைகள்
- அழுக்கு துடைப்புத் தாள், ஒற்றுத் தாள் வகைகள்
- அழுக்கடைந்த உணவுச் சரைகள் – மின்னலை அடுப்பில் வேகும் சோளப்பொரிச் சரை, ஐஸ்கிறீம் பெட்டி வகைகள்
- இனிப்பு, விசுக்கோத்து, கேக்கு வகைகள்
- கழிவுக் கச்சு, உடல்தூய்மை பேணும் பொருட்கள்
- மண்ணுடன் கூடிய வீட்டுத் தாவரங்கள்
- பிராணிகளின் கழிவு, படுக்கை, மலம்

தயவுசெய்து பின்வருவனவற்றை இடவேண்டாம். அவை உருக்குலையா. ஆதலால் அவற்றைக் கலப்புரமாக மாற்ற முடியாது.

- உலர்த்தி-தூசு (Dryer lint)
- உலர்த்தி-தகடுகள் (Dryer sheets)
- இறகுகள்
- முடி/உரோமம்
- கணப்பு அல்லது இறைச்சி சுடும் அடுப்புச் சாம்பல்
- சுள்ளிகள்
- உறிஞ்சிப் பைகள் (Vacuum bags)

**மீளப் பாவிக்கப்படும் சேதனப் பொருட்கள்**
இவை ரொறன்ரோ வடக்கில் அமைந்துள்ள படிமுறையிடும் களத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு ஒரு தொழினுட்பத்தின் மூலம் சேதனப் பொருட்களிலிருந்து மீளப்

பாவிக்கத்தக்க, தேவைப்படாத கூறுகள் அகற்றப்படும். *உருக்குலைக்கும் படிமுறை (Anaerobic digestion) மூலம்* உயிர்ம வாயு உற்பத்தி செய்யப்படும். சேதனக் கழிவு கலப்புரமாக மாற்றப்படும்.

*உருக்குலைக்கும் படிமுறை என்பது உயிர்வாயு அற்றநிலையில் நுண்மங்களைக் கொண்டு திண்மங்களை உருக்குலைக்கும் படிமுறை ஆகும்.*

**கலப்புரமாக்கலைத் தொடரவும்**

கொல்லைப்புற கலப்புரமாக்கியைப் (backyard composter) பாவிப்பவர்கள் கலப்புரமாக்கலைத் தொடர்வது மெத்த நல்லது. அதனைவிட அதிக சேதனக் கழிவுகளைப் பச்சைக் கொள்கலத்தில் இடலாம். அதாவது பிராணிகளின் கழிவு வகைகள், இறைச்சி, மீன், எலும்பு மற்றும் பிறவற்றை உங்கள் பச்சைக் கொள்கலத்தில் இடலாம்.

**மாணவர்கள் உங்கள் வாயிலுக்கு வருவார்கள், எதிர்பார்த்திருக்கவும்.**

கோடை காலம் முழுவதும் வீட்டுக்கு வீடு சென்று பச்சைக் கொள்கல சேதனக் கழிவுத் திட்டத்தை விதந்துரைப்பதற்கு ரொறன்ரோ மாநகரம் மாணவர்களை அமர்த்தியுள்ளது. (அவர்கள் யூன் மாதம் வந்ததும் தமது பணியைத் தொடங்கிவிட்டார்கள்). அவர்களுள் எவராவது ஏற்கெனவே உங்கள் வீட்டுக்கு வந்திருக்கக்கூடும்.

இத்திட்டம் குறித்து நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு மாணவர்கள் மறுமொழி கூறுவார்கள். பச்சைக் கொள்கலத் திட்டம் சுமுகமாக இயங்குவதற்கு வேண்டிய விபரங்கள் அனைத்தும் உங்களை வந்தடைதல் மிகவும் முக்கியம் என்று நாம் கருதுகிறோம்.

**ஏதாவது கேள்விகள் உண்டா? மேலதிக விபரம் தேவையா?**

பச்சைக் கொள்கலத் திட்டம் குறித்து நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், எமது வாடிக்கையாளர் சேவையுடன் தொடர்புகொள்ளவும்: 416-338-2010, அல்லது எமது இணையத் தளத்தை நாடவும்: www.city.toronto.on.ca/greenbin